# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : சமூகப் பிரச்சனைகள்

பகுதி : **மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மையினரின் பிரச்சனைகள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மையினரின் பிரச்சனைகள்

**முன்னுரை:**

**மனித உரிமைகள்**

1. உரிமைகள் என்பது ஒரு மனிதனின் சமூக வாழ்வின் பல்வேறு நிபந்தனைகளின் தொகுப்பு ஆகும். அவைகளின்றி ஒரு மனிதனின் வாழ்வு சிறப்படையாது. மனித உரிமைகள் என்பது ஒரு மனிதனுக்கு இயற்கையாகவே கிடைக்கப் பெற வேண்டிய உரிமைகள் ஆகும்.
2. உரிமை எனும் "கோரிக்கை" சமூகத்தால் அங்கீகரிக்கப்படுகிறது. மேலும் ஒரு அரசாங்கத்தால் செயல்படுத்துகிறது என்பது "பொசாங்க்வட்" அவர்களின் கருத்தாகும்.
3. ஒவ்வொரு மனிதனின் அமைத்து முன்னேற்ற நடவடிக்கைகளுக்கும் அடிப்படை ஆதாரமாக திகழக் கூடியது மனித உரிமை எனும் அடிப்படை உரிமை ஆகும்.
4. இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு ஐ.நா மனித உரிமைகளைப் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

**இந்தியாவில் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனைகள்:-**

**மனித உரிமைகளுக்கான சவால்கள்:-**

**சமூக ரீதியிலான சவால்கள்:-**

1. ஒப்பந்த தொழிலாளர் - குழந்தை தொழிலாளர்
2. தீண்டாமை
3. பெண் சிசுக் கொலை
4. குடும்ப வன் கொடுமை
5. பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் தொல்லைகள்
6. குழந்தைத் திருமணம்
7. பெண்களுக்கு எதிரான சுரண்டல்
8. தலீத் மற்றும் பழங்குடியின மக்களின் மீதான தாக்குதல்கள்.

**மத ரீதியிலான சவால்கள்:-**

1. இனவாதம் /மதவாதம்
2. சாதி வன்முறைகள்
3. கௌரவக் கொலைகள்

**பொருளாதார ரீதியிலான சவால்கள்:-**

1. வறுமை
2. வேலையின்மை
3. போதை மருந்துக்கு அடிமையாதல்
4. நுகர்வோர் உரிமை மறுக்கப்படுதல்

**அரசியல் ரீதியிலான சவால்கள்:-**

1. சிறைச்சாலைகளில் அத்து மீறி நிகழும் வன்முறைகள்
2. போலி - என்கவுண்டர்கள்
3. அரசியல் ரீதியிலான வன்முறைகள்

**மனித உரிமைகள் மீதான உலகளாவிய தீர்மானம்-1948**

1. ஒரு தனிமனிதனின் வாழ்க்கை, சுதந்திரம், சமத்துவம், கௌரவம் தொடர்பான உரிமைகளே அடிப்படை உரிமைகளாகக் கருதப்படுகிறது.
2. ஐ.நா. சபையானது அக்டோபர் 24, 1945 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
3. இதன் முக்கியமான நோக்கங்களுள் ஒன்று மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மதித்தல் ஆகும்.
4. மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச மசோதாக்களை ஐ.நா-வே வடிவமைக்கின்றது. ஐ.நா.வின் மனித உரிமைகள் தொடர்பான சாசனம் ஆனது 1948 ம் ஆண்டு டிசம்பர் 10-ம் நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனவே இது "உலகளாவிய மனித உரிமைகள் சாசனம்" என்று அழைக்கப்படுகிறது.
5. மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச மசோதாக்களை ஐ.நா-வே வடிவமைக்கின்றது. ஐ.நா.வின் மனித உரிமைகள் தொடர்பான சாசனம் ஆனது 1948 ம் ஆண்டு டிசம்பர் 10-ம் நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனவே இது "உலகளாவிய மனித உரிமைகள் சாசனம்" என்று அழைக்கப்படுகிறது.

இச்சாசானமானது மனித உரிமைகள் தொடர்பான 30 கருத்துரைகளைக் கொண்டுள்ளது. அது கீழ்கண்டவாறு பிரிக்கப்படுகிறது.

1. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்
2. சமூக, பொருளாதார, கலாச்சார உரிமைகள் ஆகும்.

**குறிக்கோள்கள்:-**

1. ஒரு தனிமனிதனின் அனைத்து வகையான முன்னேற்றத்திற்கும் ஊன்று கோலாக அமைந்துள்ளது.
2. மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மதித்தல்.
3. மனித குலத்திற்கு இடையே எந்த பாகுபாடும் இல்லாமல் அனைவரும் "சமம்" என்பதை ஐ.நா. வலியுறுத்துகின்றது.

**மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தின் 30 கருத்துரைகள்:-**

1. சரத்து 3-11 → தனிமனித உரிமைகள்
2. சரத்து 12-17 → சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்
3. சரத்து 18-21 → ஆன்மிக, அரசியல் மற்றும் பொது சுதந்திரம்
4. சரத்து 22-27 → சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகள்
5. சரத்து 28-30 → ஒரு தனிமனிதனின் சமூக கடமைகள்.

**தனிமனித உரிமைகள்:-**

1. சரத்து-3 :- வாழ்க்கைச் சுதந்திரம் மற்றும் ஒரு தனிமனிதனின் பாதுகாப்பு தொடர்பான உரிமைகள்
2. சரத்து -4 :- அடிமை வியாபாரம் மற்றும் அடிமைத்தனத்தை ஒழித்தல்.
3. சரத்து -5 :- தனி மனிதன் எவரையும் துன்புறுத்த கூடாது.
4. சரத்து -6 :- அங்கீகாராத்திற்கான உரிமை
5. சரத்து - 7 :- சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
6. சரத்து -8:- அடிப்படை உரிமை மீறப்படுவதில் இருந்து வலிமையான தீர்வு பெறுவதற்கான அடிப்படை உரிமை.
7. சரத்து - 9 :- யாரையும் நீதிக்குப் புறம்பான முறையில் கைது செய்யக் கூடாது என்பதற்கானது.
8. சரத்து - 11:- யூகத்தின் அடிப்படையில் நிரபராதிக்கு தண்டனை வழங்குவதற்கு எதிரான உரிமை.

**சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்:-**

1. சரத்து 12 :- சட்டத்தை பாதுகாத்தல்
2. சரத்து 13 :- இயக்கங்களுக்கான சுதந்திரம்
3. சரத்து 14 :- புகலிடம் தேர்விற்கான அல்லது தேடுதலுக்கான உரிமை
4. சரத்து 15:- ஒரு நாட்டின் குடிமகனாக இருப்பதற்கான உரிமை
5. சரத்து 16 :- அனைவருக்கும் திருமணத்தில் சமத்துவத்தை பேணுதல் மற்றும் சம உரிமை வழங்குதல்
6. சரத்து 17:- சொந்தமாக சொத்து வைத்திருப்பதற்கான உரிமை

**அரசியல், ஆன்மீக, பொது சுதந்திரம்:-**

1. சரத்து 18 :- சுதந்திரமாகவும், சுயமாகவும், மனசாட்சிப்படியும் சிந்திக்கும் உரிமை
2. சரத்து 19 :- தங்கள் எண்ணங்களையும், கருத்துக்களையும், அபிப்ராயங்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தும் உரிமை
3. சரத்து 20 :- சங்கங்களையும், கழகங்களையும் ஏற்படுத்துவதற்கான உரிமை
4. சரத்து 21 :- அரசாங்கத்தின் ஓர் அங்கமாக இருப்பதற்கான உரிமை

**சமூக, பொருளாதார, கலாச்சார உரிமைகள்:-**

1. சரத்து 22 :- அரசாங்க ஈடுபாட்டின் வாயிலாக சமூக பாதுகாப்பினைப் பெறுவதற்கான உரிமை
2. சரத்து 23 :- வேலை செய்வதற்கான உரிமை
3. சரத்து 24 :- ஓய்வு பெறுவதற்கான உரிமை
4. சரத்து 25 :- வாழ்வாதாரத்தைப் பெறுவதற்கான உரிமை
5. சரத்து 26 :- கல்வி பெறுவதற்கான உரிமை
6. சரத்து 27 :- சுதந்திரமாகப் பங்கெடுத்தலுக்கான (Participation) உரிமை.

**ஒரு தனிமனிதனின் சமூக கடமைகள்:-**

1. சரத்து 28 :- சர்வதேச மற்றும் சமூக ஆணைகளுக்கு உரிமையளித்தல்
2. சரத்து 29 :- ஒரு இனத்தின் (பிரிவின்) கடமை
3. சரத்து 30 :- சாசனத்தில் அறிவுறுத்தப்பட்ட "சுதந்திரத்திற்கான" உரிமையைப் பாதுகாத்தல்.

**தேசிய மனித உரிமை விதிகள்:**

தேசிய மனித உரிமை விதிகள் பொதுவாக 2 வகைகளாகப் பிரிக்கப்படுகிறது.

1. அரசியலமைப்பு விதிகள்
2. சட்டமுறையிலான விதிகள்

**அரசியலமைப்பு விதிகள்**

1. மனித உரிமைகள் தொடர்பான அரசியலமைப்பு விதிகள் முழுமையும் "இந்திய அரசியலமைப்பை" மூலாதாரமாகக் கொண்டு எழுந்தவைகளாகும்.
2. முகவுரை, அடிப்படை உரிமைகள், அரசு நெறிமுறைக் கோட்பாடுகள், அடிப்படை கடமைகள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர், ஆங்கிலோ-இந்தியன் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு போன்றவைகள் இந்திய அரசியலமைப்பின் மனித உரிமைகள் தொடர்பான முக்கிய கருத்துரைகளாகும்.

**அரசியலமைப்பு வாயிலான பாதுகாப்புகள்:-**

முகவுரையில் குறிப்பிட்டுள்ளவாறு சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் வாழ்க்கைச் சுதந்திரம் தொடர்பான உரிமைப் பாதுகாப்புகள்.

1. சரத்து 14:- சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
2. சரத்து 15:- ஒரு தனிமனிதன் இனம், மதம், சாதி, பிறப்பு, பிறப்பிடம் போன்ற காரணங்களுக்காக வேறுபடுத்தல் கூடாது.
3. சரத்து 16 :- அரசாங்க வேலை வாய்ப்புகளில் அனைவருக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும்.
4. சரத்து 17 :- தீண்டாமை ஒழிப்பு -தீண்டாமைச் சட்டம்(1955), பின்னர் இதுவே சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்(1976) என மாற்றப்பட்டது.
5. சரத்து 18 :- பட்டங்கள் ஒழிப்பு (ஆங்கிலேயர் தந்த பட்டங்கள் ஒழிப்பு, இந்திய அரசால் வழங்கப்படும் பத்மஸ்ரீ, பத்மபூசன் போன்ற பட்டங்களும், இராணுவ பட்டங்களான பரம்வீர் சக்ரா போன்ற பட்டங்கள் இருக்கலாம்.)
6. சரத்து 19 :- பேச்சு மற்றும் கருத்துரிமை, ஆயுதமின்றி கூடும் உரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, இந்தியாவில் எங்கும் செல்ல உரிமை, இந்தியாவில் எங்கும் வசிக்க உரிமை, எந்தத் தொழிலையும் செய்ய உரிமை, கூட்டுறவு சங்கம் அமைக்கும் உரிமை ஆகியன. தற்போது தனிமனித சுதந்திர உரிமைகள் 6.

7. சரத்து 20 :- குற்றங்களுக்கு தண்டனை அளிப்பதிலிருந்து பாதுகாப்பு வழங்குகிறது.
8. சரத்து 21:- உயரி வாழ்தல் மற்றும் தனிநபர் சுதந்திரம்
9. சரத்து 22 :- கைது செய்து காவலில் வைப்பதிலிருந்து பாதுகாப்பு
10. சரத்து 23 :- சுரண்டலுக்கெதிரான பாதுகாப்பு, சட்டவிரோதமாக மனிதர்களை வியாபாரம் செய்வதிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது.
11. சரத்து 24:- 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களை தொழிற்பாலைகளிலோ, சுரங்கங்களிலோ, பிற அபாயகரமான தொழில்களிலோ வேலைக்கு அமர்த்துவதை தடை செய்கிறது.
12. சரத்து 25 :- யாரும் எந்த மதத்தையும் சுதந்திரமாக ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.
13. சரத்து 26:- எல்லா சமயத்தவரும் சமய மற்றும் அறநிலைய அமைப்புகளை அமைத்து அவற்றை நிர்வகித்துக் கொள்ள உரிமை
14. சரத்து 27:- மதத்தினை முன்னேற்றுவதற்கு வரிசெலுத்துவதிலிருந்து உரிமை
15. சரத்து 28 :- முற்றிலும் அரசாங்க நிதியில் செயல்படும் கல்வி நிறுவனங்களில் சமய போதனை கூடாது என்று கூறுகிறது.
16. சரத்து 29 :- சிறுபான்மையினர் நலன் காத்தல், தம்முடைய மொழி, பண்பாடு, எழுத்து ஆகியவற்றை பேணிக்காத்தல்.
17. சரத்து 30 :- சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தி நிர்வகிக்கவும் உரிமையளிக்கிறது.
18. சரத்து 31 :- சொத்துரிமையை 44வது சட்ட திருத்தத்தின் மூலம் 1978 ஆம் ஆண்டு நீக்கப்பட்டு பிரிவு 300A க்கு மாற்றப்பட்டது. தற்போது இது சட்ட உரிமையாகும்.
19. சரத்து 41 :- வேலை செய்வதற்கான உரிமை
20. சரத்து 32,226 :- உச்ச நீதிமன்ற, உயர்நீதி மன்றத்தின் நீதிப் பேராணைகள்

**சட்ட முறையிலான விதிகள்:-**

1. மத்திய, மாநில அரசாங்கங்களால் அவ்வப்போது சூழ்நிலைக்கேற்றவாறு இயற்றப்படும் சட்டங்களாகும்.
2. SC / ST மக்களின் சிவில் உரிமையைப் பாதுகாக்கும் சட்டம், தீய செயல்களில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் சட்டம் (Prevention of Atrocities act) தேசிய பெண்கள் ஆணையச் சட்டம், தேசிய சிறுபான்மை இனத்தவருக்கான சட்டம்,

தேசிய மனித உரிமைகள் சட்டம் போன்றவைகள் சில முக்கிய சட்ட வடிகால்களாகும்.

**மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இந்திய அரசால் இயற்றப்பட்ட சில சட்டங்கள்:-**

1. 1829- வில்லியம் பெண்டிங் பிரபுவின் சதி ஒழிப்பு
2. 1929-குழந்தைத் திருமண ஒழிப்புச் சட்டம்
3. 1956- இந்து இளவர், காப்புரிமை சட்டம்
4. 1976-சம ஊதியச் சட்டம்
5. 1989-தாழ்த்தப்பட்ட, பழங்குடியினரை அநீதிகளில் இருந்து பாதுகாக்கும் சட்டம்
6. 1993-தேசிய மனித உரிமைகள் சட்டம்
7. 2005-தகவலறியும் உரிமைச் சட்டம்
8. 2005-மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்
9. 1955-சிவில் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம்
10. 1956-பெண்கள், குழந்தைகளை சட்டத்துக்கு புறம்பான முறையில் கடத்தலைத் தடுக்கும் சட்டம்
11. 1961 - பேறுகால சலுகை சட்டம்
12. 1976 - சம ஊதியச் சட்டம்
13. 1938-குழந்தைகளின் வேலைவாய்ப்பு குறித்த சட்டம் (திருத்தப்பட்டது -1985)
14. 1986-குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புச் சட்டம் இளஞ்சிறார் நீதிச் சட்டம்.
15. 1989-SC/ST மக்களுக்கெதிரான அநீதிகளைத் தடுக்கும் சட்டம்
16. 1990-தேசிய பெண்கள் ஆணையச் சட்டம்
17. 1992-தேசிய சிறுபான்மையினர் ஆணையச் சட்டம்
18. 1993-தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையச் சட்டம்
19. 1995-மாற்றுத் திறனாளிகளின் பாதுகாப்பு, சமஉரிமைக்கான சட்டம்

**அம்னெஜ்டி இண்டர்நேஷனல் (Amnesty International 1961)**

1. மனித உரிமையை பாதுகாத்தல் மற்றும் மனித உரிமை மீறலைத் தடுப்பது இரண்டும் இதன் பங்காகும்.
2. மனித உரிமை மீறலினால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு போதிய நிவாரணம் வழங்குவது.

**குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் (Children's defence fund 1973)**

1. குழந்தைகளின் வறுமை ஒழிப்பிற்கான கொள்கைகள், திட்டங்களை வகுத்தல்.
2. கவனிப்பாரின்றி இருத்தல், புறக்கணித்தல் ஆகியவற்றில் இருந்து குழந்தைகளைப் பாதுகாத்து அவர்களுக்கு கல்வியில் சமமான உரிமைகளை பெற வழிவகுக்கின்றது.

**மனித உரிமைகள் செயல்பாட்டு மையம் (Human rights action centre)**

1. மனித உரிமைகளுக்கான சர்வதேச பிரகடனத்தை நடைமுறைப்படுத்துதல்.
2. மனித உரிமை மீறல்களை தடுப்பதற்கான புதிய வழிமுறைகளை உருவாக்குதல், கண்டறிதல் மற்றும் மேம்படுத்துதல்.

**Human Rights Watch:-**

மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச விதிகளின் மூலம் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை தடுக்கும் அதிகாரங்களைச் கொண்டுள்ளது.

**Human Rights Without Frontier:-**

சர்வதேச அளவில் மனித உரிமைகளை பாதுகாப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

**National Associations for the Advancement of coloured people:- (1999)**

1. மக்களின் சமூக, பொருளாதார, அரசியல், கல்வி உரிமைகளை உறுதி செய்வதே அதன் நோக்கமாகும்.
2. இனம் சார்ந்த பாகுபாடுகள் மற்றும் இனம் சார்ந்த வெறுப்புகளை நீக்குவதே இதன் பணியாகும்.

**Asia Watch (ஆசிய வாட்ச்)**

1. மனித உரிமைகள் தொடர்பான NGO 1978 ல் கண்டறியப்பட்டது.
2. மனித உரிமைகள் தொடர்பான நிகழ்வுகளில் கவனம் செலுத்தகின்றது.
3. மனித சமூகத்தின் நீதிக்காக குரல் கொடுக்கும் அமைப்பாகும்.
4. இதற்கு முன் "Helsinki Watch"என்று அழைக்கப்பட்டது.

**ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணையம் (UNCHR)**

1. ஐ.நா.வின் ஓர் உறுப்பு அமைப்புகளுள் ஒன்றாகும்.
2. 1946 ம் ஆண்டு இயற்றப்பட்டது.
3. 2006ம் ஆண்டில் இவ்வாணையமானது ஐ.நாவின் மனித உரிமை கவுன்சில் ஆக மாற்றம் செய்யப்பட்டது (United Nations Human rights Council 2006)

**UNHRC –யின் பணிகள்:-**

1. சர்வதேச விதிகளுக்கு உட்பட்டு மனித உரிமைகள் பாதுகாப்பு, மேம்பாடு ஆகியவற்றிற்கு உத்தரவாதம் அளிக்கின்றது.
2. மனித உரிமைகளுக்காக சர்வதேச ஒத்துழைப்பினைக் கொண்டு வருதல்.
3. மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனைகளில் சர்வதேச, தேசிய அளவில் முக்கியத்துவம் அளித்தல்.
4. மனித உரிமைகள் தொடர்பான நிகழ்வுகளை சர்வதேச அளவில் ஒருங்கிணைக்கும் அமைப்பாகும்.
5. மனித உரிமைகளை நடைமுறைபடுத்தலில் சர்வதேச அளவில் உறுதியுடன் செயல்பட ஊக்குவிக்கின்றது.
6. மனித உரிமைகளை மேம்படுத்த புதிய விதிகளை உருவாக்குவதில் துணை புரிகின்றது.
7. மனித உரிமைகள் தொடர்பான அமைப்புகள், உடன்படிக்கைகளுக்கு ஆதரவளித்தல்.
8. மனித உரிமை மீறல்களில் உடனடியாக நடவடிக்கை எடுக்க முனைகின்றது.
9. மனித உரிமைகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.
10. மனித உரிமைகள் தொடர்பான துறை ரீதியான கள செயல்பாடுகள், நிகழ்வுகளில் ஆர்வமுடன் பங்கேற்றல்
11. மனித உரிமைகள் தொடர்பான கல்வி, தகவல், ஆலோசனை, மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.
12. தேசிய அளவில் மனித உரிமை கட்டமைப்புகளை நிறுவுவதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

**மனித உரிமைகளுக்கான நீதிமன்றங்கள்:-**

1. தேசிய மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் 1993-ன் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கென ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட்டது.
2. மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான அடிமட்ட அளவிலான சிறந்த அமைப்பாக ஒருங்கிணைப்புடன் செயல்படுகின்றது.

**பணிகள்:-**

1. மனித உரிமை மீறல் தொடர்பாக எழுந்த குற்றச்சாட்டுகள் ரீதியிலான நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு வேகமாக தீர்வு காண்பதற்கென இத்தகைய நீதிமன்றங்கள் உருவாக்கப்படுள்ளது.
2. மாவட்ட அளவில் மனித உரிமைகளுக்கான நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டதன் மூலம் சமூகத்தின் அடிமட்ட அளவில் இருந்து மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.
3. மனித உரிமைகள் மீறல்களில் உடனடியாக மீள் நடவடிக்கை எடுக்க முனைகின்றது.
4. மனித உரிமைகளுக்கான தற்காப்பு நிகழ்வுகளை மேற்கொள்கின்றது.
5. தேசிய அளவில் மனித உரிமைக்கான கட்டமைப்புகளை உருவாக்குவதில் துணை புரிகின்றது.

**இந்தியாவில் சிறுபான்மையினர் :**

பழங்குடி இன மக்கள் இயற்கையின் குழந்தைகளாவர் அவர்களின் வாழ்க்கை முறையானது இயற்கைச் சூழலின் அடிப்படையில் அமைந்துள்ளது. பரந்து விரிந்த இந்திய நிலப்பரப்பில் பல மாறுபட்ட பழங்குடி இன மக்கள் வசித்து வருகின்றனர். பழங்குடி இன மக்களின் வசிப்பு பகுதியை மேம்பாடும், அவர்களை சிறுபான்மையினராக கருதிக்கொண்டு அபிவிருத்தி வளர்ச்சியை ஏற்படுத்த அரசு பல நடவடிக்கை மேற்கொள்கிறது. ஆனால் அவர்களின் வசிப்பு பகுதியானது தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்கள் (அல்லது) குக்கிராமங்களில் வாழ்கின்றனர். இதனால் சுற்றுசூழல், பொருளாதாரம் கல்வியில் பன்முகதன்மையின் வளர்ச்சி பெறாமலும், அனைத்து விதமான வறுமையும் பெற்ற இந்தியாவின் தாழ்த்தபட்டோர் பழங்குடியினர் (ம) சரியான விவரம் பெற

முடியாத பழங்குடியினர் எனும் பலவீனமான, பிரிவின் மக்கள் தொகை எண்ணிக்கையானது மொத்த மக்கள் தொகை எண்ணிக்கையின் அவல நிலையில் உள்ளனர்.


**பழங்குடி மக்களின் இனங்கள்**

இந்தியாவில் 533 பழங்குடி இனங்கள் [ஒரு சில மாநிலத்தில் பல இனங்கள் ஒன்றுடன் ஒன்று கலந்துள்ளன] மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் என நாடு முழுவதும் பரவி உள்ளனர். இந்திய அரசிலமைப்பு படி சரத்து 342-ன் கீழ் மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களில் அதிகபடியான 62-இனங்கள் ஒரிசாவில் உள்ளனர். 50 -இனங்கள் மத்திய பிரதேசம், சட்டிஸ்கர், ஜார்க்கண்ட், பீகார் மற்றும் ஒரிசா போன்ற மாநிலங்களில் உள்ளனர். மேலும் மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்காளம் போன்ற மாநிலத்தில் குறைந்த பழங்குடி இன மக்கள் உள்ளனர்.

**பழங்குடியினர் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள் :**

**1. சிறு நிலம் வைத்திருத்தல் :**

1. அவர்கள் வைத்திருக்கும் சிறு நிலத்தினால் பொருளாதார முன்னேற்றம் இன்மை.
2. குறைவான மகசூலினால் கடன்சுமை ஏற்படுகிறது.




**தொழிற் முறை :**

1. பெரும்பாலும் பாரம்பரிய தொழிற்முறையைப் பின்பற்றுவது
2. 90% உற்பத்தியில் ஈடுபடுவது

**2. கல்வியறிவின்மை :**

1. கல்வியறிவின்மை விகிதம் குறைவாக உள்ளது.
2. இந்நிலையானது அவர்களின் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகள் பற்றிய அறியாமைக்கு வழிவகுக்கிறது.

**3. பழங்குடியினர் அல்லாதவர் நிலம் பெறுதல் :**

1. பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை சட்டபூர்வமாக பனங்குடியினராக அல்லாதவருக்கு மாற்றபடுதல்.
2. காட்டில் அவர்களின் உற்பத்தி சுதந்திரம் குறைக்கப்பட்டுள்ளது.

**4. சுரண்டல் :**

நிலப்பிரபுகள், மர ஒப்பந்ததாரர்கள், வட்டிக்கு கடன்பெறுவது, வருவாய் துறையினர் மற்றும் (போலீஸ்) காவல் துறை அதிகாரிகள் போன்றோரால் பழங்குடி இனர் சுரண்டப்படுகின்றனர்.

**5. போதிய வங்கி வசதியின்மை :**

போதிய வங்கி வசதியின்மையினால் அவர்கள் வட்டிக்கு கடன் தருபவரை சார்ந்து உள்ளனர்.

**6. பழமையான முறைகள் :**

1. அவர்கள் நவீன சாகுப்படி முறையினை பின்பற்றாமல் பழமையான முறையைப் பின்பற்றுகின்றனர்.
2. பெரும்பான்மையாக சாகுபடி மாற்றுவதால்.

**7. நலத்திட்டங்களின் தோல்வி :**

அரசு பல நலத்திட்டங்கள் பழங்குடி இன மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு போதுமான முன்னேற்றம் ஏற்படவில்லை.

**8. சமூக தனிமை :**

1. அவர்கள் தனித்து வாழ்பவர்கள்.
2. அவர்களின் இடத்திற்கு போதுமான அளவிற்கு தகவல் தொடர்பு வசதி முன்னேற்றமடையவில்லை.

**9. வறுமை :**

பழங்குடியினர் வறுமையின் காரணமாக மிகவும் பின்தங்கிய மற்றும் வளர்ச்சி இல்லாத வாழ்க்கை வாழும் நிலையில் உள்ளனர்.

**10. மருத்துவ வசதி இல்லாமை :**

1. பழங்குடி இன மக்களுக்கு ஏற்படும் நோய் பாதிப்பு மற்றும் விபத்து போன்ற நேரங்களில் போதுமான மருத்துவ வசதி இல்லாத நிலை ஏற்படுகிறது.

2. பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் பொது சுகாதார விநியோக அமைப்பின் நிலை மிகவும் பலவீனமாக உள்ளது.

**11. இன பாகுபாடு :**

1. சமூக பின் தங்கிய இனமாக கருதபடுதல்.
2. கீழ்தரமான வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுதல்.

   எ.கா - மலம் அள்ளும் தொழில்

**12. சமூக கண்டிக்கத்தக்க செயல் :**

பெரும்பாலான ஒப்பந்த தொழிலாளர்களாக மற்றும் குழந்தைத் தொழிலாளர்களாக பழங்குடியின மக்களை நிர்பந்திக்கப்படுகின்றன.

**பழங்குடி நலத்துறை அமைச்சகம் முக்கிய திட்டங்கள்/திட்டம் சுருக்கமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.**

**அரசியல் சாசனத்தின் 275 (1) கீழ் சிறப்பு மத்திய உதவி மற்றும் மானியங்கள் :**

1. மத்திய அரசானது மாநிலம் மற்றும் யூனியன் பிரதேச அரசின் உதவி உடன் மத்திய அரசின் சிறப்பு உதவி திட்டத்தின் கீழ் பழங்குடியினர் துணை திட்டம் மூலம் பழங்குடி வளர்ச்சிகாகவும் தங்களது முயற்சிகளின் துணையாகவும். இந்த உதவி அடிப்படையில் வேளாண்மை, தோட்டக்கலை, சிறிய நீர்பாசன வசதி, மண் பாதுகாப்பு, கால்நடை வளர்ப்பு காடுகள் வளர்ப்பு, கல்வி, கூட்டுறவு, மீன்வளம், கிராமம் மற்றும் சிறிய அளவு தொழிற்சாலைகள் துறைகளில் குடும்பம் சார்ந்த வருமானம் ஈட்டும் திட்டமாகவும், குறைந்த பட்ச தேவைகளை நிறைவு செய்யும் திட்டமாகும்.

2. இந்திய அரசிலமைப்பின் சரத்து 275 (1)-ன் படி மாநில அரசு/ யூனியன் அரசு பழங்குடி வளர்ச்சிக்கான திட்டமிடுவதில் அதை நிர்வாகப்படுத்தவும், நிர்வாக மட்டத்தினை உயர்ந்த நிதி பயன்படுத்தவும் மேலும் பழங்குடி மாணவர்கள் தரமான கல்வி பெற உறைவிடப் பள்ளிகள் அமைக்கவும், இச்சரத்து படி இந்நிதி வழிவகுக்கிறது.

## புராதனப் பழங்குடி குழுக்கள் வளர்ச்சி திட்டம் : (PTGS)

இந்தியாவில் 75-இன பழங்குடியினர் உள்ளனர். அவர்கள் 17 மாநிலங்களிலும், 1 யூனியன் பிரதேசமான அந்தமான் நிக்கோபரிலும் உள்ளனர். அவர்களின் வாழ்க்கை முறையும், பொருளாதாரம், குறைந்த தொழில்நுட்பம் உடைய பழைய விவசாய முறையும், குறைந்த கல்வியறிவும் மக்கள் தொகையில் எண்ணிக்கையின் அடிப்படையில் பழங்குடி மக்கள் குறைந்தும் காணப்படுகின்றனர் என பல அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு இவர்கள் புராதனப் பழங்குடி குழுக்கள் (PTGS) என மத்திய அரசு வகைப்படுத்தியது மத்திய அரசானது இவர்களின் வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்படுத்த 1998-99-ல் மொத்த வளர்ச்சியையும், நெகிழ்வும் கொண்ட திட்டம் வகுத்தது அத்திட்டத்தின் மூலம் வீட்டு வசதி, உள்கட்டமைப்பு வளர்ச்சி, கால்நடை அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், (நிலம்) காணி வழங்கல் விவசாய வளர்ச்சி, சமூக பாதுகாப்பு, காப்பீடு என அனைத்து விதமான வளர்ச்சி கொண்டத்திட்டமாக மீண்டும் பதினொரவது ஐந்தாண்டு திட்டத்தில் (2007-08) முறைப்படுத்த பாதுகாப்புடன் கூடிய வளர்ச்சி" (CCD) என புது பொழிவு தரும் வேகத்துடன் மாநில அரசாங்கமும், அரசு சாரா அமைப்புகளும் அவர்களின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

## பழங்குடியின மாணவர் / மாணவியருக்கான விடுதிகள் :

1. பழங்குடியின மாணவிகள் கல்வி பெற்று மேம்பாட்டு வளர்ச்சிப் பெற மத்திய அரசானது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பழங்குடியின மாணவிகள் விடுதி அமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இதில் மத்திய அரசானது 50% நிதியும், மாநில அரசானது 50% நிதியும், யூனியன் பிரதேசத்திற்கு மத்திய அரசே 100% நிதியும் வழங்கும் என முடிவு செய்யப்பட்டது. இதனடிபடையில் மாநில மற்றும் யூனியன் பிரதேசத்தில் 1999-2000 ஆண்டில் 29-மாணவியர் விடுதியும், 2000-2001 ஆண்டில் 11 மாணவியர் விடுதிக்கும் நிதி ஒதுக்கப்பட்டது.

2. இந்த மாதிரியான திட்டத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் மாணவர்களுக்கான விடுதி அமைக்கும் திட்டம் 1989-90-ல் தொடங்கப்பட்டது. இந்த நிதியின் மூலம் 2000-2001- ஆண்டு 15-மாணவர் விடுதி அமைத்து தர நிதி வழங்கப்பட்டது.

**பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளில் தொழிற்பயிற்சி மையங்கள் :**

1. இம்மையத்தின் திட்டமானது பழங்குடியின இளைஞர்களின் திறன்களை மேம்படுத்தி பாரம்பரிய/நவீன கல்வித் தகுதியை பொறுத்து பல்வேறு செய்தொழில், தற்போதைய பொருளாதாரப் போக்குகள் மற்றும் சந்தை திறனில் பொருத்தமான கவலை பெற அல்லது சுய வேலை பெற உதவி செய்கிறது மேலும் இத்திட்டத்திற்கு மாநில அரசம், யூனியன் நிர்வாகமும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் செயல்படுத்த 100% மானியம் வழங்குகிறது.

2. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் வலியுறுத்தும் திட்டங்களை மாநில அரசானது "தன்னார்வ முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் மாநில குழுவின்" பரிந்துரையின் பேரில் வழங்கப்பட வேண்டும். இந்த குழுவானது தலைமை செயலாளர்/செயலாளர், மாநில பழங்குடி நல/வளர்ச்சி துறையின் தலைமையில் அமைந்தது. இக்குழுவின் பரிந்துரையானது ஒவ்வொரு நிதி ஆண்டும் வலியுறுத்தபடும், நிதியாண்டின் திட்டத்துடன் உருவாக்கப்படும்.

**இந்திய பழங்குடி கூட்டுறவு சந்தைப்படுத்தல் அபிவிருத்தி கூட்டமைப்பு லிமிடெட் : (TRIFED)**

இந்திய பழங்குடி கூட்டுறவு சந்தைப்படுத்தல் அபிவிருத்தி கூட்டமைப்பு லிமிடெட் 1987- ஆண்டில் மத்திய அரசால் உருவாக்கப்பட்டது. பழங்குடியின மக்களின் உற்பத்தியை லாபகரமான முறையில் சந்தைப்படுத்தவும், தனியார் சுரண்டலில் காப்பாற்றவும் வர்த்தகர், இடைத்தரகர் போன்றோர் சுரண்டலில் இருந்து தடுக்கவும் அரசே 1987-ஆண்டில் ரூ.100 கோடி முதலீட்டில் ஆரம்பித்தது. இந்நிறுவனத்தில் அரசின் பங்கு ரூ. 99.75 கோடியாகும், பிற பங்குதாரர்களின் பங்கு 0.23 கோடியாகும்.

**தேசிய பழங்குடி வெளி நாட்டு படிப்புக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம் :**

1. பழங்குடியின மாணவர்கள் முதுகலை படிப்பு மற்றும் முனைவர் படிக்கு வெளிநாட்டில் சென்று பயின்று வர அரசானது அவர்களுக்கு பயண செலவு, தங்கும் செலவு என அனைத்து செலவையும் ஏற்று கல்வி உதவி தொகையும் வழங்குகிறது.
2. இவ்வுதவி தொகையானது 35 - விதமான துறைகளின் முதுகலைப் படிப்பிற்கும் சேர்க்கப்பட்டுள்ளது.

3. இவை மட்டுமின்றி ஒவ்வொரு ஆண்டும் 15- விதமான பரிசும், உதவிகளும் அளிக்கப்படும்.
4. இத்திட்டம் முதன் முதலில் 1954-55-ல் தொடங்கப்பட்டது தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் வலியுறுத்தலின் வாயிலாக 2007-08-ஆண்டில் மறுசீரமைக்கப்பட்டது.

**இந்தியாவில் பழங்குடியினர்கான கமிஷன்**

1. முதல் ஆணைக்குழு SC, ST போலா பாஸ்வான் சாஸ்திரி தலைமையில் 1978-ல் ஆரம்பிக்கப்பட்டது.
2. 1990-ல் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் தேசிய ஆணையாக பெயர் மாற்றப்பட்டது.
3. அதன்பிறகு முதலாவது ஆணைக்குழு - 1992-ல், எஸ்.எச்.ராம்தான் தலைமையில் அமைக்கப்பட்டது.
4. 3-வது கமிஷன் திலீப் சிங் பாவுரிய தலைமையில் 1998-ல் அமைக்கப்பட்டது.
5. 4-வது கமிஷன் Dr. பிசாய் சோன்கர் சாஸ்திரி தலைமையில் 2002-ல் அமைக்கப்பட்டது.
6. 2003-ல் அரசியலமைப்பு 89-திருத்தம்படி தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி தேசிய ஆணையத்தை பழங்குடியினர் தேசிய ஆணையமாக மாற்றப்பட்டது.

**தமிழ்நாட்டில் பழங்குடியினர்க்கு அரசின் நலத்திட்டங்கள்**

1. கொத்தடிமை முறை ஒழித்தல்
2. ஒப்பந்த தொழிலாளர் முறை ஒழித்தல்
3. பழங்குடியின் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை விடுதி சிறப்பு வழிக்காட்டி
4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் +2 தேர்வில் மாவட்ட அளவில் வெற்றி பெற்றவருக்கு முதல் பரிசு ரூ.3,000 2-ம் பரிசு ரூ.500, 10-வகுப்பிற்கு முதல் பரிசு ரூ.1000 2-ம் பரிசு, ரூ.300.
5. காடு வளர்ப்பு திட்டங்கள்
6. அவர்களின் விவசாயத்திற்கு மாணியம் வழங்குதல்
7. விலங்கு வளர்ப்பு - பழங்குடி நலத்திட்டங்கள்

**தமிழ்நாட்டில் பழங்குடியினர் உள்ள சில மாவட்டங்கள்**

1. தோடா இமைக்கள் நிலகிரி
2. குரும்பன்ஸ்
3. கோடா திருநெல்வேலி
4. கண்ணைகாரன் திருநெல்வேலி
5. காமரா திருநெல்வேலி

**வினாக்கள்**

1. மனித உரிமைகள் மற்றும் அதனைச் சார்ந்த பிரச்சனைகள் குறித்து எழுதுக.
2. சிறுபான்மையினருக்கான பிரச்சனைகள் பற்றி சிறுகுறிப்பு வரைக.